தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

## <u>*தமிழகத்தின் சில இடங்களில் மழை வாய்ப்பு*</u>



தமிழகத்தின் சில இடங்களில் வியாழக்கிழமை (நவ.6) மழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. வங்கக்கடலில் புதிய காற்றழுத்தத் தாழ்வு நிலை ஒன்று அண்மையில் உருவானது. தற்போது அது காற்றழுத்தத் தாழ்வு மண்டலமாக வலுப்பெற்று விசாகப்பட்டினத்துக்கு தென் கிழக்கே 690 கிலோ மீட்டர் தொலைவில் நிலை கொண்டுள்ளது. காற்றழுத்தத் தாழ்வு மண்டலமானது மேற்கு - வட மேற்கு திசையில் நகரலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. இதன் காரணமாக தமிழகத்தில் மழை வாய்ப்பு இருக்காது என அறிவிக்கப்பட்டுள்ளது. இருப்பினும் பருவமழையால் மாநிலத்தின் சில இடங்களில் புதன்கிழமை பரவலாக மழை பெய்யும் என்று முன்னறிவிப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன. சென்னையைப் பொருத்த வரை வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் அதிகபட்ச வெப்பநிலை 88 டிகிரி பாரன்ஹீட்டாக இருக்கும் என்று வானிலை மையம்தெரிவித்துள்ளது.

**<u>விவசாயிகளுக்கு உரங்கள், விதைகள் உரிய நேரத்தில் கிடைக்க நடவடிக்கை</u>**



வடகிழக்குப் பருவமழை தீவிரமடைந்துள்ளதால், மாநிலம் முழுவதும் விவசாயிகளுக்கு டி.ஏ.பி. யூரியா, இதர வகை உரங்கள், விதை போன்றவற்றை கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் உரிய நேரத்தில் கிடைக்கச் செய்ய வேண்டுமென கூட்டுறவுத் துறை கேட்டுக் கொண்டுள்ளது. இதற்கான உத்தரவை அதிகாரிகளுக்கு அந்தத் துறையின் அமைச்சர் செல்லூர் கே.ராஜூ பிறப்பித்துள்ளார். சென்னையில் கூட்டுறவுத் துறையைச் சேர்ந்த அனைத்து மண்டல இணைப் பதிவாளர்களுடன் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. அதில் அவர் பேசியது:

வடகிழக்குப் பருவமழை தீவிரமடைந்துள்ளதால் மாநிலம் முழுவதும் டி.ஏ.பி. யூரியா, இதர வகை உரங்கள், விதை போன்றவற்றை கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் விவசாயிகளுக்குத் தேவையான அளவில் உரிய நேரத்தில் கிடைக்க அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும். பொது மக்களுக்கு நியாயமான விலையில் தரமான மருந்துகளை விற்பனை செய்திடும் வகையில் கூட்டுறவுத் துறையால் ஏற்கெனவே நடத்தப்பட்டு வரும் 210 மருந்தகங்களுடன் நிகழாண்டில் புதிதாக 100 அம்மா மருந்தகங்கள் தொடங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. தற்போது 17 அம்மா மருந்தகங்கள் திறக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. கூட்டுறவு மருந்தகங்கள் மூலம் மருந்துகள் விற்பனையில் குறைந்தபட்சம் 15 சதவீதம் தள்ளுபடி வழங்கப்படுகிறது. வெளிச் சந்தையில் காய்கறி விலை உயர்வைக் கட்டுப்படுத்தும் நோக்கில் திறக்கப்பட்ட 53 பண்ணை பசுமை நுகர்வோர் கடைகள் மூலம் 31 வகையான காய்கறிகள் விற்பனை செய்யப்படுகின்றன என்றார்

செல்லூர் ராஜு. இந்தக் கூட்டத்தில், கூட்டுறவு, உணவு, நுகர்வோர் பாதுகாப்புத் துறை செயலாளர் எம்.பி.நிர்மலா, கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் கிர்லோஷ்குமார் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## <u>முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டத்தை 136 அடியாகவே பராமரிக்க சட்ட நடவடிக்கை: கேரள அரசு பரிசீலனை</u>

முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டம் உயர்ந்துவரும் நிலையில், ""பாதுகாப்பு காரணங்களுக்காக" அணையின் நீர்மட்டத்தை 136 அடிக்கு மேல் உயராமல் வைத்துக் கொள்ள சட்டப்பூர்வமாக நடவடிக்கை எடுப்பது குறித்து ஆராய்ந்து வருவதாக கேரள முதல்வர் உம்மன் சாண்டி புதன்கிழமை தெரிவித்தார். அணையில் 142 அடிக்கு நீரைத் தேக்கி வைக்க வேண்டும் என்று தமிழக அரசின் கோரிக்கைக்கு உச்ச நீதிமன்றம் அனுமதியளித்துள்ள நிலையில், கேரள முதல்வர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது முக்கியத்துவம் பெறுகிறது. அணையின் நீர்மட்டத்தை கேரள அரசின் தலைமைச் செயலர் நேரில் பார்வையிட்ட நிலையில், மாநில அமைச்சரவைக் கூட்டத்துக்குப் பிறகு செய்தியாளர்களிடம் பேசுகையில், உம்மன் சாண்டி இத்தகவலைத் தெரிவித்தார். "அணையின் நீர்மட்டத்தை 136 அடிக்கு மேல் உயர்த்தக்கூடாது என்ற எங்களின் நிலைப்பாட்டை உச்ச நீதிமன்றம் அமைத்த நிபுணர் குழு நிராகரித்து விட்டது. இந்நிலையில், இதுகுறித்து எடுக்கப்பட வேண்டிய சட்ட நடவடிக்கைகள் குறித்து ஆராய்ந்து வருகிறோம்" என்று உம்மன் சாண்டி குறிப்பிட்டார். முல்லைப் பெரியாறு அணை பாதுகாப்பாக உள்ளது எனவும், அதனால் அணையின் நீர்மட்டத்தை 142 அடியாக உயர்த்தலாம் எனவும், இந்த ஆண்டு மே 7-ம் தேதி உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டது. அணையின் பாதுகாப்பை மேலும் வலுப்படுத்தி, அதன் நீர்மட்டத்தை 152 அடியாக உயர்த்தவும் உச்ச நீதிமன்றம் அனுமதி வழங்கியிருந்தது. இது தவிர, அணையின் கட்டுமானம் ஆபத்தாக உள்ளதாகவும், அதனால் நீர்மட்டத்தை 136 அடிக்கு மேல் உயர்த்தத் தேவையில்லை என்றும்

கேரள அரசு இயற்றிய சட்டத்தையும் உச்ச நீதிமன்றம் ரத்து செய்தது. இந்த விவகாரத்தில், உச்ச நீதிமன்றம் முன்னதாக பிறப்பித்த உத்தரவு களை மீறி அந்த சட்டத்தை இயற்றியதற்காக கேரள அரசுக்கு உச்ச நீதிமன்றம் கண்டனமும் தெரிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது. தமிழக-கேரள எல்லையில் உள்ள முல்லைப் பெரியாறு அணை 120 ஆண்டுகள் பழைமையானதாகும். தமிழகத்தின் 5 மாவட்டங்களில் உள்ள விவசாய நிலங்கள், முல்லைப் பெரியாறு அணையின் வாயிலாக வரும் நீரை நம்பியுள்ளன.

## ரூ. 21.63 லட்சம் மதிப்பில் விலையில்லா ஆடுகள்

பெருமாநல்லூர், பொங்குபாளையம் ஊராட்சிகளில் 166 பயனாளிகளுக்கு மொத்தம் ரூ. 21.63 லட்சம் மதிப்பில் விலையில்லா ஆடுகளை வனத்துறை அமைச்சர் எம்.எஸ்.எம்.ஆனந்தன் புதன்கிழமை வழங்கினார். திருப்பூர் ஊராட்சி ஒன்றியத்திற்கு உள்பட்ட பொங்குபாளையம், பெருமாநல்லூர் ஊராட்சிகளில் விலையில்லா ஆடுகள் வழங்கும் விழா ஆட்சியர் கு.கோவிந்தராஜ் தலைமையில் நடைபெற்றது. இதில், கால்நடை பராமரிப்புத் துறை சார்பில் மொத்தம் 166 பயனாளிகளுக்கு ரூ. 21.63 லட்சம் மதிப்புள்ள விலையில்லா ஆடுகளை வனத்துறை அமைச்சர் எம்.எஸ்.எம்.ஆனந்தன் வழங்கினார். பொங்குபாளையம் ஊராட்சி பள்ளிபாளையத்தில் 67 பயனாளிகளுக்கு ரூ. 8.57 லட்சம் மதிப்பிலும், பெருமாநல்லூர் ஊராட்சியில் 99 பயனாளிகளுக்கு ரூ. 13.06 லட்சம் மதிப்பில் விலையில்லா ஆடுகள் வழங்கப்பட்டன. திருப்பூர் ஊராட்சி ஒன்றிய பொது நிதியிலிருந்து, ஈட்டி வீரம்பாளையம் ஊராட்சி, வீதிக்காடு எஸ்.எஸ். நகர் பகுதியில் ரூ. 7 லட்சம் மதிப்பில் புதிதாக தார்ச்சாலை அமைக்கும் பணி, கருக்கன்காட்டுப்புதூரில் அனைவருக்கும் கல்வி இயக்கத்தின் சார்பில் ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளிக்கு ரூ. 15 லட்சம் மதிப்பீட்டில் புதிதாக

கட்டடம் கட்டுவதற்கான பணிகளை பூமிபூஜை செய்து அமைச்சர் எம்.எஸ்.எம்.ஆனந்தன் தொடங்கி வைத்தார். இதில், திருப்பூர் சார் ஆட்சியர் கே.செந்தில்ராஜ், திருப்பூர் ஊராட்சி ஒன்றியத் தலைவர்ஆர்.சாமிநாதன், கால்நடை பராமரிப்புத்துறை இணை இயக்குநர் நாகராஜன், ஊராட்சித் தலைவர்கள், கவுன்சிலர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர் கள் பங்கேற்றனர்.

## <u>கோத்தகிரியில் தேநீர் விலை உயர்வு</u>

கோத்தகிரியில் தேநீர் மற்றும் காபி விலை உயர்த்தப்பட்டதால் பொதுமக்கள் மிகவும் அதிருப்தியில் உள்ளனர். பால் விலை உயர்ந்ததையடுத்து ஹோட்டல்களில் தேநீர் மற்றும் காஃபி விலையும் உயர்த்தப்பட்டுள்ளது. ரூ. 7-க்கு விற்பனை செய்யப்பட்ட தேநீர் தற்போது ரூ. 10-க்கும், ரூ. 10-க்கு விற்கப்பட்ட காபி ரூ. 15-க்கும் விற்கப்படுகின்றது. பால் உபயோகிக்காத தேநீர் ரூ. 5-லிருந்து ரூ. 8 ஆக உயர்த்தப்பட்டுள்ளதாக கூறப்படுகின்றது. இது குறித்து, வியாபாரிகள் மற்றும் பொதுமக்கள் கூறியதாவது: நாங்கள் வியாபார நாள்களில் 10 டீ-க்கு மேல் குடிக்கின்றோம். ஆனால், இங்குள்ள ஹோட்டல்களில் தரம் குறைந்த கலப்படம் உள்ள தேயிலைத் தூளை கலக்கி கொடுக்கும் தேநீருக்கு ரூ. 7 மிகவும் அதிகம். அதிலும் ஒரு லிட்டர் பாலுக்கு ரூ. 10 மட்டுமே உயர்த்தியுள்ள நிலையில் தேநீர் ஒரு டம்ளருக்கு ரூ. 10, காபி ரூ. 15-க்கும் விலை நிர்ணயம் செய்து விற்கின்றனர். பால் உபயோகிக்காத வர டீ-க்கும் ரூ. 2 விலை உயர்த்தியுள்ளனர். எனவே, தேநீர் மற்றும் காபி விலையை குறைக்க உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், ஹோட்டல்களில் சாயம் கலந்த தேயிலை தூள் உபயோகிப்பதை தடுத்து நிறுத்த அதிகாரிகள் முன்வர வேண்டும் எனவும் வியாபாரிகள், பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**மறையூரில் தடுப்பணையை உயர்த்த கேரள அரசு முடிவு; அமராவதி அணைக்கு நீர்வரத்து பாதிக்கும் அபாயம்**




உடுமலை : கேரள மறையூர் பகுதியில், கிராம குடிநீர் தேவைக்காக, தடுப்பணையை உயர்த்திக்கட்ட, அம்மாநில அரசு அடிக்கல் நாட்டு விழா நடத்தியுள்ளது. தடுப்பணையால், அமராவதி அணைக்கு நீர் வரத்து பாதிக்கும் என, பாசன விவசாயிகள் அச்சம் தெரிவித்துள்ளனர். கேரள இடுக்கி மாவட்டம், மறையூர், காந்தலூார் உள்ளிட்ட பகுதிகள் மேற்குத்தொடர்ச்சி மலையில் அமைந்துள்ளன. இப்பகுதிகளில் உருவாகும், பல்வேறு சிற்றாறுகள், உடுமலை அமராவதி அணையின், முக்கிய நீர் வரத்து ஆறுகளாக உள்ளன.அணைக்கு முக்கிய நீர் வரத்து அளிக்கும் ஆறுகள் அமைந்துள்ள பகுதியில், கேரள அரசு திட்டங்களை செயல்படுத்தும் போதெல்லாம், அமராவதி அணை பாசனம் பாதிக்கப்படும் என்ற அச்சம், விவசாயிகளிடையே தொடர்கதையாக உள்ளது.கடந்த 2012ம் ஆண்டு, இடுக்கி மாவட்டத்தில், விவசாய சாகுபடி பரப்பை அதிகரிக்க, நீர் வளம் மற்றும் வேளாண்துறை உட்பட பல்வேறு துறைகளை ஒருங்கிணைத்து, 'இடுக்கி பேக்கேஜ்' திட்டத்தை செயல்படுத்த முனைந்தது. குறிப்பாக, மேற்குத்தொடர்ச்சி மலையில் உருவாகி, அமராவதி அணையை நோக்கி வரும் ஆறுகளின் குறுக்கே, எட்டு இடங்களில், தடுப்பணை கட்ட, திட்டத்தில், நிதி ஒதுக்கீடு

செய்யப்பட்டது.இதற்கு, அமராவதி பாசன விவசாயிகளிடையே, கடும் எதிர்ப்பு கிளம்பியது. பல்வேறு காரணங்களால், இடுக்கி பேக்கேஜ் திட்டத்தை கேரள அரசு கிடப்பில் போட்டதால், அமராவதி விவசாயிகள் பெருமூச்சு விட்டனர்.இந்நிலையில், காந்தலூார் ஊராட்சி, கீழாந்தூர் கிராமக்குடிநீர் மற்றும் பாசன தேவைக்காக, புதிய திட்டத்தை கேரள அரசு செயல்படுத்த உள்ளது. அங்குள்ள, செங்கல்லாறு தடுப்பணையை, 12 அடியிலிருந்து 19 அடியாக உயர்த்த, 23 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தடுப்பணையை உயர்த்துவதற்கான பணிகளுக்கு, கடந்த 3ம் தேதி, செங்கல்லாறு பகுதியில், அம்மாநில நீர் பாசன துறை அமைச்சர் ஜோசப் தலைமையில் அடிக்கல் நாட்டு விழா நடந்துள்ளது. அமராவதி அணை நீர்ப்பிடிப்பு பகுதி அருகே, தடுப்பணை உயரத்தை உயர்த்தும் திட்டம், அமராவதி பாசன விவசாயிகளிடையே அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. **'ஆய்வு செய்யப்படும்'** பொதுப்பணித்துறை அதிகாரிகள் கூறுகையில், 'கேரள அரசு தடுப்பணையை உயர்த்தும் பகுதி, அமராவதி நீர் பிடிப்பு பகுதிக்குட்பட்டதா என்பது குறித்து ஆய்வு நடத்தப்படுகிறது. ஆய்வுக்கு பின்னர், அறிக்கை அரசுக்கு சமர்ப்பிக்கப்படும்', என்றனர். **போராட தயாராகும் விவசாயிகள்** : அமராவதி அணைக்கு நீர் வரத்து அளிக்கும் ஆறுகளின் குறுக்கே, தடுப்பணைகள் கட்டப்படுவது பாசன திட்டத்தையே முடக்கும் அபாயம் உள்ளதாக, எதிர்ப்பு தெரிவித்து விவசாயிகள் போராட தயாராகி வருகின்றனர். தடுப்பணை உயரத்தை அதிகரிக்கும், கேரள அரசின் தற்போதைய நடவடிக்கைக்கு, ம.தி.மு.க., எதிர்ப்பு தெரிவித்துள்ளது. தமிழக பொதுப்பணித்துறை அதிகாரிகள் தெரிவிக்கும் கருத்திற்காக, அமராவதி பாசன விவசாயிகளும் காத்திருக்கின்றனர்.

**<u>விவசாயிகள் குழுக்கள் கிராமங்களில் நியமனம்</u>**

வடமதுரை : வேளாண்மைத்துறை சார்பில் பயிர் வாரியான விவசாயிகள் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளது.வேளாண்மை உதவி இயக்குனர் ராணி

கூறுகையில், ""வடமதுரை வட்டாரத்தில் உள்ள வருவாய் கிராமங்களில் பயிர் சார்ந்த விவசாயிகள் குழு நியமிக்கப்பட்டு வருகிறது. வேளாண்மை துறைக்கு ஒதுக்கப்படும் அனைத்து திட்டங்களும் குழுக்களின் மூலம் செயல்படுத்தப்படும் என்பதால் விவசாயிகள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்," என்றார்.

## <u>இயந்திர நடவு முறை அமைச்சர் ஆய்வு</u>

வாலாஜாபாத்: மதுவந்தாங்கல் கிராமத்தில், இயந்திர முறையில் நடவு செய்யப்பட்ட நெற்பயிரை, வேளாண் துறை அமைச்சர் நேற்று பார்வையிட்டார். படப்பை அடுத்த, எழிச்சூர் முதல் நிலை ஊராட்சியில், மதுவந்தாங்கல் கிராமம் உள்ளது. இங்கு பெரும்பாலான விவசாயிகள், இயந்திர நடவு முறையில், பாபட்லா நெற்பயிரை நடவு செய்துள்ளனர். இந்த வயல்வெளிகளை நேற்று பிற்பகல் 1:00 மணி அளவில், தமிழக வேளாண் துறை அமைச்சர் அக்ரி கிருஷ்ணமூர்த்தி மற்றும் கால்நடை துறை அமைச்சர் சின்னைய்யா ஆகியோர் பார்வையிட்டனர். இயந்திரம் மூலம் நடவு செய்துள்ள விவசாயிகளிடம், தொழில்நுட்பம் குறித்து அமைச்சர்கள் கேட்டறிந்தனர். இந்த ஆய்வில், வேளாண் துறை ஆணையர் ராஜேந்திரன், காஞ்சிபுரம் ஸ்ரீபெரும்புதுார் லோக்சபா எம்.பி.,க்கள், சட்டசபை உறுப்பினர்கள், வேளாண் துறை அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

## <u>ஜப்பான் காடு வளர்ப்பு திட்டம்: மத்திய குழுவினர் ஆய்வு</u>

திருப்போரூர்: ஜப்பான் நிதியுதவியுடன், திருப்போரூர் அருகே செயல்படுத்தப்பட்டு வரும், காடு வளர்ப்பு உள்ளிட்ட திட்டங்களின் நிலை குறித்து, மத்திய குழுவினர் நேற்று ஆய்வு மேற்கொண்டனர். திருப்போரூர் அடுத்த தண்டலம், ஆலத்துார், சிறுதாவூர் ஆகிய மூன்று கிராமங்களில், கடந்த 1999ம் ஆண்டு, 25 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில், காடு வளர்ப்பு திட்டம் செயல்படுத்தப்பட்டது. தொடர்ந்து, 5 ஆண்டுகள்

செயல்படுத்தப்பட்ட இத்திட்டத்தில், காடு வளர்ப்புடன் நீராதாரத்தை பெருக்க, கசிவுநீர் குட்டைகள் அமைத்தல், மகளிர் பொருளாதார நிலை மேம்பட சுழல்நிதி வழங்குதல் போன்ற திட்டங்கள் செயல்படுத்தப் பட்டது. இதன் மேம்பாடு பற்றி அறிய, 'ஜெய்கா' என்ற பெயரில், 13 பேர் கொண்ட மத்திய ஆய்வு குழுவினர் நேற்று காலை வந்தனர். அவர்கள், கடன் வாங்கிய மகளிர், முறையாக கடனை செலுத்தியுள்ளனரா, புதிய செடிகள் வளர்க்கப்பட்டுள்ளனவா, என்பது பற்றி ஆய்வு செய்தனர். பாதிக்கும் மேற்பட்டவர்கள் கடனை முழுமையாக திருப்பி செலுத்தாமல் இருப்பது தெரிய வந்தது. அவர்களை கடனை திரும்ப செலுத்த குழுவினர் அறிவுறுத்தினர். காஞ்சிபுரம் மாவட்ட வன அலுவலர் ராஜேந்திரன், திருப்போரூர் வனச்சரகர் கோபு மற்றும் வனவர்கள் உடனிருந்தனர். இக்குழுவினர் கூறுகையில், 'தமிழகத்தின் காடு மேம்பாட்டிற்கு, 500 கோடி ரூபாய், ஜப்பான் சார்பில் வழங்கப்பட்டுள்ளது. இதன் முன்னேற்றம் குறித்து ஆய்வு செய்ய வந்துள்ளோம். நாங்கள் தமிழகத்தில் தொடர்ந்து, 30 கிராமங்களில் ஆய்வு மேற்கொண்டு ஜப்பான் அரசுக்கு அறிக்கை அளிப்போம்' என்றனர்.

## முட்டை விலை 330 காசாக நிர்ணயம்

நாமக்கல் : தமிழகம் மற்றும் கேரளாவில், முட்டை கொள்முதல் விலை, 330 காசாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. நாமக்கல்லில், தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு கூட்டம், நேற்று நடந்தது. முட்டை உற்பத்தி, மார்க்கெட் நிலவரம் குறித்து, பண்ணையாளர்கள் விவாதித்தனர். இதையடுத்து, முட்டை கொள்முதல் விலையில், 320 காசுகளுக்கு விற்பனை செய்யப்பட்ட முட்டை, பத்து காசு அதிகரித்து, 330 காசாக நிர்ணயம் செய்யப்பட்டது.நாட்டின் பிற மண்டலங்களில், முட்டை விலை (காசுகளில்) நிலவரம்:சென்னை, 355, பெங்களூரு, 355, மைசூரு, 345, ஹைதராபாத், 335, மும்பை, 375, விஜயவாடா, 328, கோல்கத்தா, 385,

பர்வாலா, 355, டில்லி, 370.இவ்வாறு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. நாமக்கல்லில், நேற்று நடந்த பண்ணையாளர்கள், வியாபாரிகள் ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில், முட்டைக் கோழி விலை, ஒரு கிலோ, 63 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டது. பல்லடத்தில் நடந்த, கறிக்கோழி உற்பத்தியாளர் ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில், ஒரு கிலோ, 73 ரூபாயாக நிர்ணயம் செய்யப்பட்டது.

## கால்நடை வாழ்வாதாரம் குறித்த பயிற்சி முகாம்

நாமக்கல் : கால்நடைகளின் வாழ்வாதாரம் குறித்த பயிற்சி முகாம், நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் நடந்தது. நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில், கால்நடை சார்ந்த வாழ்வாதாரங்களின் இன்றைய நிலை மற்றும் எதிர்காலம் குறித்த பயிற்சி முகாம் நடந்தது. கல்லூரி முதல்வர் துரைசாமி தலைமை வகித்தார். இந்திய வேளாண் ஆராய்ச்சி கழக முன்னாள் துணை இயக்குனர் வேங்கடசுப்ரமணியன் பங்கேற்று, திறன்பெற்ற மனித வளம், கால்நடை துறைக்கு தேவைப்படுகிறது என்றார்.இந்திராகாந்தி திறந்தவெளி பல்கலை., இணை பேராசிரியர் சசிதர், நாமக்கல் மண்டல இணை இயக்குனர் சக்திவேல், அஸ்ஸாம், மேற்குவங்கம், பஞ்சாப், மஹாராஷ்டிரா, சட்டீஸ்கர், ஆந்திரா, கர்நாடகா, கேரளா, தமிழகம் உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களில் செயல்படும் கால்நடை பல்கலை., நிபுணர்கள், முனைவர் நர்மதா, பேராசிரியர், துறை தலைவர், அலுவலர்கள் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

## நிரம்பிய கிணறுகள் நெல் சாகுபடி தீவிரம்

மேட்டூர் : ஆண்டுதோறும் சோளம், பருத்தி உள்ளிட்ட மானாவாரி பயிர்களையே அதிக அளவில் சாகுபடி செய்த கொளத்தூரில், தற்போது கிணறுகள் நிரம்பியதால், ஐந்தாண்டுக்கு பின்பு, விவசாயிகள் நெல் சாகுபடி மேற்கொண்டுள்ளனர். மேட்டூர் தாலுகா, கொளத்தூர் ஒன்றியம் வறட்சியான பகுதியாகும். இப்பகுதியில், மானாவாரி நிலங்களே

அதிகமாக உள்ளது. விவசாயிகள் ஆண்டுதோறும் கிணறு மற்றும் நிலத்தடி நீரை பயன்படுத்தி, நிலங்களில் பருத்தி, சோளம், எள், மிளகாய் உள்ளிட்ட பயிர்களை சாகுபடி செய்வது வழக்கம்.வடகிழக்கு பருவமழை சீஸனில், அரிதாக சில ஏரி பாசன பகுதிகளில் மட்டுமே, விவசாயிகள் நெல் சாகுபடி செய்வர். இரு ஆண்டுகளில், பருவமழை பொய்த்து கடும் வறட்சி ஏற்பட்டதாலும், ஐந்தாண்டுகளாக கிணறுகள் நிரம்பாததாலும், விவசாயிகள் மானாவாரி நிலங்களில், நெல் சாகுபடி மேற்கொள்ள வில்லை.நடப்பாண்டு தீவிரம் அடைந்த வடகிழக்கு பருவமழையால், ஐந்தாண்டுக்கு பின்பு, கொளத்தூர் பகுதியில் மானாவரி நிலங்களில் உள்ள கிணறுகள் நிரம்பியது, விவசாயிகளை, மகிழ்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.அதனால், வழக்கமாக வடகிழக்கு பருவமழை சீஸனில் எள், மிளகாய், பருத்தி சாகுபடி செய்யும் பெரும்பாலான விவசாயிகள், தற்போது நெல் சாகுபடி மேற்கொண்டுள்ளனர்.

## வெள்ளாடு வளர்ப்பு பயிற்சி

ஈரோடு : ஈரோடு கால்நடை மருத்துவ பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தில் வரும், 12 முதல், 14ம் தேதி வரை, மூன்று நாட்கள் நபார்டு வங்கி உதவியுடன், இலவச வெள்ளாடு வளர்ப்பு பயிற்சி அளிக்கப்படுகிறது.அம்மூன்று நாட்களும், காலை, 10 முதல் மாலை, 4 மணி வரை பயிற்சி வழங்கப்படும். இதே போல் வரும், 18 முதல், 20ம் தேதி வரை கறவை மாடு வளர்ப்பு பயிற்சி நடக்கிறது.பயிற்சிகளுக்கு தலா, 30 விவசாயிகள் மட்டுமே அனுமதிக்கப்படுவர். மேலும் விவரங்களுக்கு, 0424-2291482 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம், என்று கேட்டு கொள்ளப்பட்டுள்ளது.

## 433 டன் கொப்பரை ரூ.4.35 கோடிக்கு ஏலம்

கோபி : கோபி ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில், நடப்பாண்டில், இதுவரை, 433 டன் கொப்பரை தேங்காய், 4.35 கோடி ரூபாய்க்கு ஏலம்

போனது. தமிழகத்தில், தென்னை சாகுபடியில், கோவை மாவட்டம், பொள்ளாச்சி முதலிடத்திலும், தஞ்சை மாவட்டம் ஒரத்தநாடு, பேராவூரணி மற்றும் பட்டுக்கோட்டை, தேனி மாவட்டம் ஆகியவை, அடுத்தடுத்த இடத்தை பிடித்துள்ளது. ஈரோடு மாவட்டம் நான்கா மிடத்தில் உள்ளது. ஈரோடு மாவட்டத்தில், ஆண்டுக்கு, 30 லட்சம் தென்னை மரக்கன்றுகளை, விவசாயிகள் புதிதாக நடுகின்றனர். விவசாயிகள் தாங்கள் உற்பத்தி செய்த தேங்காயில், மட்டை உரித்து, 30 சதவீதம் மார்க்கெட்டுக்கும், 70 சதவீதம் கொப்பரைக்கும் கொடுக்கின்றனர்.ஈரோடு மற்றும் திருப்பூர் மாவட்டத்தை ஒருங்கிணைத்து, அவல்பூந்துறை, கொடிமுடி, சத்தியமங்கலம், கோபி, அந்தியூர், பூதப்பாடி, முத்தூர், வெள்ளகோவில் ஆகிய ஊர்களில், தேங்காய் மார்க்கெட்கள் உள்ளன. இங்கு அதிகளவில் கொப்பரை தேங்காய் ஏலம் நடக்கிறது.அதன்படி, கோபி ஒழுங்கு முறை விற்பனை கூடத்தில், வியாழக்கிழமை தோறும் தேங்காய் பருப்பு ஏலம் நடக்கிறது. கோபி, ஊத்துக்குளி, கடத்தூர், சிறுவலூர், ஒடையாக்கவுண்டன் பாளையம் மற்றும் சுற்று வட்டார பகுதியை சேர்ந்த விவசாயிகள், ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் மூலம் பயனடைந்து வருகின்றனர். விவசாயிகள் கொண்டு வரும் தேங்காய் பருப்பு மூட்டைகளை, இருப்பு வைக்க வசதியாக, 2,000 டன் கொள்ளளவு கொண்ட குடோன் உள்ளது. கோபி ஒழுங்கு முறை விற்பனைக்கூடத்தில், கடந்த, 2013-14ம் நிதியாண்டில் மட்டும், 420 டன் கொப்பரை தேங்காய்கள், 4.28 கோடி ரூபாய்க்கு வர்த்தகம் நடந்துள்ளது. கடந்த நிதியாண்டில் கொப்பரை தேங்காய் வரத்து அதிகமாக இருந்ததால், அதன்விலை கிலோவுக்கு, 60 ரூபாயை தாண்டாமல் இருந்தது.நடப்பாண்டில், கொப்பரை வரத்து குறைந்ததால், அதன் விலை சராசரியாக, 100 ரூபாய்க்கு ஏற்ற, இறக்கமாகவே இருந்து வருகிறது. கடந்த அக்., 16ல், 304 தேங்காய்

பருப்பு மூட்டைகள், 100.35 முதல், 106.50 ரூபாய்க்கு விலை போனது. அக்., 23ல், 158 மூட்டைகள், 97.87 முதல், 102.29 ரூபாய்க்கு விலைபோனது. அதையடுத்து அக்., 30ல், 215 மூட்டைகள் வரத்தானதில், 92.65 முதல், 97.05 ரூபாய்க்கு ஏலம் போனது.நடப்பு நிதியாண்டு துவங்கிய முதல் நேற்று வரை, கோபி ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில், மொத்தம், 433 டன் கொப்பரை தேங்காய் பருப்புகள், 4.35 ரூபாய்க்கு வர்த்தகம் நடந்துள்ளது.

## பால் விலை உயர்வு நன்றி அறிவிப்பு

காங்கேயம் : பால் கொள்முதல் விலை உயர்த்தப்பட்டதற்கு, தமிழக அரசுக்கு நன்றி தெரிவிக்கும் கூட்டம், காங்கேயத்தில் நடந்தது. ஈரோடு மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கம் சார்பில், எம்.எல்.ஏ., நடராஜ் தலைமையில், கூட்டம் நடந்தது.தமிழகத்தில், கிராமப்புற பொருளாதாரத்தை உயர்த்தும் வகையில், கூட்டுறவு அமைப்பின் கீழ் உள்ள, 22.5 லட்சத்துக்கும் மேலான பால் உற்பத்தியாளர்கள் பயன்பெறும் வகையில், பால் விலையை உயர்த்தி வழங்கிய, தமிழக அரசுக்கு நன்றி தெரிவிக்கப்பட்டது.காங்கேயம் நகராட்சி தலைவர் மணிமாறன், முன்னாள் எம்.எல்.ஏ., செல்வி முருகேசன், ஈரோடு ஆவின் தலைவர் ராமசாமி, ஈரோடு ஆவின் பொது மேலாளர் சுகுமார், துணைப்பொது மேலாளர் தேவராஜ், ஒன்றிய இயக்குனர்கள் செந்தில், ரத்தினசாமி, தாராபுரம் பால் சேகரிப்பு குழுத்தலைவர்கள் ராஜேந்திரன், சுரேஷ் உட்பட பலர் பங்கேற்றனர்.

## நான்கு ஆண் குட்டிகளை ஈன்ற ஆடு; கால்நடை மருத்துவர்கள் வியப்பு

பந்தலூர் : பந்தலூர் அருகே சேரம்பாடியில் ஒரு ஆடு நான்கு ஆண் குட்டிகளை ஈன்றுள்ளது. முதல்வரின் விலையில்லா ஆடு வழங்கும் திட்டத்தின் கீழ் சேரம்பாடியை சேர்ந்த சரஸ்வதி என்பவருக்கு ஆடு வழங்கப்பட்டது. இந்த ஆடு நேற்று முன்தினம் நான்கு குட்டிகளை ஈன்றுள்ளது. இதில், நான்கு குட்டிகளுமே ஆண் குட்டிகள் என்பது

குறிப்பிடத்தக்கது.இதேபோல், படைச்சேரி பகுதியை சேர்ந்த ஏலியாஸ் என்பவர் பசுமாடுகளை வளர்த்து வருகிறார். இதில், ஒரு மாடு நேற்று முன்தினம் இரண்டு ஆண் கன்றுகளை ஈன்றது.இந்த ஆச்சரியமான செயல் குறித்து, கால்நடை டாக்டர் பிரபு தலைமையிலான மருத்துவ குழுவினர் பரிசோதனை செய்தனர். டாக்டர் பிரபு கூறுகையில், ""ஆடு நான்கு குட்டிகளை ஈனுவதும், பசு இரண்டு கன்றுகளை ஈனுவதும் சாதாரணமாக நடக்கும் செயல் என்றாலும் ஒரே நேரத்தில் இரண்டும் ஆண் குட்டிகளை ஈன்றுள்ளது ஆச்சர்யத்தை ஏற்படுத்தியுள்ளது. கால்நடைகளின் உடல்நிலை நல்ல நிலையில் உள்ளது," என்றார்.

**திருச்செந்துறையில் ரூ. 96 ஆயிரத்துக்கு வாழைத்தார் ஏலம்**

திருச்சி: திருச்செந்துறை வாழை வணிக வளாகத்தில், 1,235 வாழைத்தார்கள், 96 ஆயிரத்து, 750 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டது. திருச்சி மாவட்டம் தொட்டியம், முசிறி, துறையூர் சுற்றுவட்டார பகுதிகளில் வாழை அதிக அளவில் விவசாயிகள் பயிரிடுகின்றனர். ரஸ்தாளி, பூவன், கற்பூரவள்ளி, மொந்தன் உள்ளிட்ட வாழைப்பழங்கள் உற்பத்தி செய்யப்படுகிறது. வாழை விவசாயிகளுக்கு கட்டுபடியாகும் விலை கிடைக்க, ஸ்ரீரங்கம் திருச்செந்துறையில் ஒருங்கிணைந்த வாழை வணிக வளாகம் அமைக்கப்பட்டு, செவ்வாய் கிழமை தோறும் ஏலம் நடத்தப்படுகிறது. நேற்று முன்தினம் நடத்தப்பட்ட வாழை ஏலத்திற்கு, 19 விவசாயிகள் விளைவித்த, 1,235 வாழைத்தார் களை கொண்டு வந்தனர். ஏலம் கோர, 11 விவசாயிகள் வந்தனர். ரஸ்தாளி தார் ஒன்று, 245 ரூபாய்க்கும், பூவன் தார், 290 ரூபாய், கற்பூரவள்ளி தார், 175 ரூபாய், மொந்தன் தார், 155 ரூபாய்க்கு ஏலத்தில் விற்கப்பட்டது. ஒட்டுமொத்தமாக வியாபாரிகள், 96 ஆயிரத்து, 750 ரூபாய்க்கு வாழைத்தார்களை விலைக்கு வாங்கிச் சென்றனர்.

## சீரக சம்பா நெல் நடவு பணி தீவிரம்

துறையூர்: உப்பிலியபுரம் அடுத்த டிவாரிசெட்டிபாளையம் பகுதியில், சீரக சம்பா நெல் நடவு பணியை, விவசாயிகள் துவக்கினர். கொல்லி மலை பகுதியில் கடந்த வாரம் பெய்த மழையால், புளியஞ்சோலை ஐயாற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. இதில் ஜம்போரி, ஆலத்துடையான்பட்டி சின்னஏரி, பெரியஏரி, ரெட்டியார்பட்டி ஏரிகள் நிரம்பின. கடந்த, மூன்று ஆண்டுகளாக மழை பெய்யாததால், போதிய நீர் இல்லாமல் வயல்கள் சாகுபடி செய்யப்படாமல் கிடந்தது. விவசாய கூலி தொழிலாளர்களும் வேலைதேடி வெளியூருக்கு சென்றிருந்தனர். தற்போது, ஏரிகள் நிரம்பியதால், அப்பகுதி விவசாயிகள் விவசாய பணிகளை துவக்கினர். இப்பகுதியில் அதிகம் விளையும் சீரக சம்பா, பொன்னி உள்ளிட்ட நெல் ரகங்களை பயிரிட்டுள்ளனர். ஜம்பேரி, 1,020 ஏக்கரும், பெரியஏரி, 325ஏக்கரும், சின்னஏரி, 230 ஏக்கரும், ரெட்டியார்பட்டிஏரி, 68 ஏக்கரும் பாசன வசதி அளிக்கின்றன. மூன்று ஆண்டுகளுக்குப் பின், ஏரி நிரம்பியுள்ளதால், விவசாயிகள் நெல் நடவுப்பணியை ஆர்வத்துடன் செய்து வருகின்றனர்.

## நாற்றங்கால் பணி கலெக்டர் ஆய்வு

தஞ்சாவூர்: தஞ்சாவூர் அருகே, மரம் நடும் திட்டத்துக்காக நாற்றங்கால் அமைக்கும் பணியை, மாவட்ட கலெக்டர் சுப்பையன் ஆய்வு செய்தார். தஞ்சாவூர் மாவட்டத்தில் மண் வளம் மற்றும் நீர் வளம் மூலம் விவசாயிகளின் வாழ்வாதாரத்தை உறுதிபடுத்தும் விதமாக, 30 லட்சம் மரக்கன்றுகளை நடவு செய்து பராமரிப்பதென மாவட்ட நிர்வாகம் முடிவு செய்துள்ளது. இதற்கு தேவையான நாற்றங்கால் அமைக்கும் பணி தஞ்சை மாவட்டம், பூதலூர் அடுத்த செங்கிப்பட்டி மற்றும் சானூரப்பட்டி கிராமங்களில் நடக்கிறது. இவற்றை ஆய்வு செய்த மாவட்ட கலெக்டர்

சுப்பையன், நாற்றுகளை முறையாக பராமரிக்குமாறு வேளாண் தொழிலாளர்களுக்கு அறிவுரை வழங்கினார்.

## 3 ஆண்டுக்கு பின் வந்த மழைநீர் 5 நாளில் 7 அடியை எட்டிய வெம்பக்@காட்டை அணை

சிவகாசி : வெம்பக்கோட்டை அணைக்கு 3 ஆண்டுகளுக்கு பின் மழைநீர் வந்த நிலையில், 5நாளில் 7 அடியை தொட்டது. மாவட்டத்தின் பல பகுதிகளில் வடகிழக்கு பருவமழை பெய்தாலும் வெம்பக்கோட்டை பகுதியில் சரியான மழை இல்லையே என்ற வேதனை சிவகாசி மக்களிடம் நிலவியது. இந்நிலையில் வெம்பகோட்டை அணை பகுதியில் மழை பெய்ய துவங்கியது. சங்கரன்கோயில் பகுதியில் பெய்த கனமழையால் அப்பகுதி கண்மாய் உடைந்து வெம்பக்கோட்டை அணைக்கு நீர் வரத்து அதிகரித்தது. மழையால் 23 அடி கொண்ட அணை கடந்த ஐந்து நாட்களில் 7 அடியை எட்டி உள்ளது. மூன்று ஆண்டுகளுக்கு பின் வெம்பக்கோட்டை அணைக்கு வரும் மழை நீரால் சிவகாசி பகுதியினர் மகிழ்ச்சியில் உள்ளனர். இது போல் சிவகாசி விருதுநகர் ரோட்டில் ஆனைக்குட்டம் அணை உள்ளது.இதன் அணையின் நீர்வரத்து பகுதிகளான பிளவக்கல், கோவிலாறு வத்தராயிருப்பு பெரிய கண்மாய் பகுதியில் நல்ல மழை பெய்த நிலையில் ஆனைக்குட்டம் அணைக்கு வினாடிக்கு 300 கனஅடி நீர் வரத்து உள்ளது. 25 அடி கொண்ட இந்த அணை தற்போது 20 அடியை எட்டி உள்ளது. அணையின் 4வது ஷட்டரில் நீர் கசிவு ஏற்பட்டுள்ளதால் அதிகளவு நீர் வெளியேறி இருக்கன்குடி ஆற்றில் கலக்கிறது. இதை தடுக்க அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என விவசாயிகள் கோருகின்றனர். பொதுப்பணித்துறை அதிகாரி ஒருவர் கூறுகையில், ""பிளவக்கல், கோவிலாறு அணை நிரம்பினால் அங்கு வரும் நீர் அப்படியே வெளியேற்றப்படும். வெளியேறும் நீர் ஆனைக்குட்டம் அணைக்கு வரும். நீர் வரத்து அதிகம் இருப்பதால் தற்போது 4வது ஷட்டர் கசிவு வழியாக

குறைந்தளவு நீர் வெளியேறுவதில் பாதிப்பு இருக்காது. நீர் வரத்து குறைந்தால் ஆனைக்குட்டம் ஷட்டர் முழுமையாக இறக்கி அடைக்கப்படும். மற்ற அணைகளின் நீர்மட்டத்தையும் தொடர்ந்து கண்காணித்து வருகிறோம். நீர் வரத்து குறைந்தால் ஷட்டர் முழுமையாக அடைக்கப்படும்," என்றார்.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**<u>மேட்டூர் அணை நீர்மட்டம் 103 அடியாக உயர்ந்தது</u>**



மேட்டூர் : காவிரி நீர்பிடிப்பு மற்றும் பாலாறு நீர்பிடிப்பு பகுதிகளில் மழை குறைந்ததால்,மேட்டூர் : காவிரி நீர்பிடிப்பு மற்றும் பாலாறு நீர்பிடிப்பு பகுதிகளில் மழை குறைந்ததால், மேட்டூர் அணைக்கு நீர்வரத்து சரிந்து வருகிறது. நேற்று முன்தினம் விநாடிக்கு 7200 கனஅடியாக இருந்த நீர்வரத்து, நேற்று காலை விநாடிக்கு 6865 கனஅடியாக சரிந்தது. அணையில் இருந்து கால்வாய் பாசனத்திற்கு விநாடிக்கு 301 கனஅடி வீதம் நீர் திறக்கப் பட்டு வருகிறது.

**<u>இந்திய தோட்டக் கலை கருத்தரங்கு நாளை துவக்கம்</u>**

கோவை, : தேசிய தோட்டக்கலை சங்கம் மற்றும் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் இணைந்து நடத்தும் 6வது இந்திய தோட்டக்கலை கருத்தரங்கு நாளை முதல் வரும் 9ம் தேதி வரை கொடிசியா வளாகத்தில்

நடக்கிறது. இதில், தோட்டக்கலை பயிர் உற்பத்தி, உற்பத்தி திறன் மற்றும் தரம் போன்றவை குறித்து விவாதிக்கப்படவுள்ளது. இது குறித்து தேசிய தோட்டக்கலை சங்கம் தலைவர் சதா கூறியதாவது: இந்திய தோட்டக்கலை சங்கத்தினால் இரு வருடத்திற்கு ஒரு முறை தோட்டக்கலை குறித்த கருத்தரங்கு நடத்தப்படுகிறது. இந்த முறை கோவை கொடிசியாவில் நடத்தப்படவுள்ளது. இதில், உணவு, உடல் நலம் பாதுகாப்பில் தோட்டக்கலையின் பங்கு, தோட்டக்கலை பயிர்களின் உற்பத்தி, சிறு மற்றும் குறு விவசாயிகளின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் வழிமுறைகள் போன்ற தலைப்புகளின் கீழ் விவாதங்கள் நடக்கவுள்ளது. நான்கு நாட்கள் நடக்கும் கருத்தரங்கில் தோட்டக்கலை துறையின் தற்போதைய பிரச்சனை மற்றும் எதிர்கால சவால்களை எதிர்கொள்ளும் உத்திகள் பற்றியும் பேசப்படவுள்ளது. மேலும், 7ம் தேதி முதல் 9ம் தேதி வரை தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம், தமிழக அரசு தோட்டக்கலை துறை இணைந்து சர்வதேச தோட்டக்கலை கண்காட்சியை நடத்துகிறது. இதில், மலர்கள், காய்கறிகள், பழங்கள் மூலிகை மற்றும் நறுமணப்பயிர்கள் போன்றவை இடம்பெறவுள்ளது. இந்த கண்காட்சி மற்றும் கருத்தரங்கு விவசாயிகள் தொழில்நுட்பங்கள் குறித்து தெரிந்துகொள்ள ஏதுவாக இருக்கும். இவ்வாறு அவர் கூறினார்.

## திருச்சியில் காய்கறி விலை திடீர் உயர்வு ஒரு காலிபிளவர் ரூ.50க்கு விற்பனை

திருச்சி, : திருச்சி மாவட்டத் தில் தொடர் மழையால் வரத்து குறைந்ததால் காய்கறிகளின் விலையில் திடீர் உயர்வு ஏற்பட்டுள்ளது. ஒரு காலிபிளவர் ரூ.50 வரையிலும் நேற்று விற்கப்பட்டது. திருச்சி காந்தி மார்க்கெட்டுக்கு ஊட்டி, கொடைக்கானல், கர்நா டகா, பெங்களூர் உள்ளிட்ட பகுதிகளில் இருந்து ஆங்கில காய்கறிகள் வருகின்றன. பின்னர் இந்த காய்கறிகள் பெரம்பலூர், தஞ்சை, புதுகை மற்றும் சுற்றுப்புற பகுதிகளுக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. இதேபோல் மணப்பாறை, ஆலம்பட்டி மற்றும்

வயலூர், எட்டரை, கோப்பு மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளிலிருந்து நாட்டு காய்கறிகள் தினமும் கொண்டு வரப்படுகிறது. திருச்சி மாவட்டத்தில் சில்லரை கடைகளில் இறங்கு முகத்தில் இருந்த காய்கறிகள் விலை திடீர் என்று உயர்ந்துள்ளது. கடந்த மாதம் கிலோ ரூ.50க்கு விற்ற அவரைக்காய் நேற்று ரூ.80க்கும், ரூ.25க்கு விற்ற முள்ளங்கி ரூ.40க்கும், ரூ.18க்கு விற்ற கோஸ் ரூ.20க்கும், ரூ.28க்கு விற்ற பல்லாரி ரூ.35க்கும், ரூ.25க்கு விற்ற வெண்டைக்காய் ரூ.36க்கும், ரூ.70க்கு விற்ற மாங்காய் ரூ.100க்கும், ரூ.35க்கு விற்ற கத்தரிக்காய் ரூ.70க்கும், ரூ.40க்கு விற்ற உருளை ரூ.45க்கும், ரூ.40க்கு விற்ற சின்ன வெங்காயம் ரூ.60க்கும், ரூ.40க்கு விற்ற பச்சை மிளகாய் ரூ.60க்கும், ரூ.40க்கு விற்ற பீன்ஸ் ரூ.60க்கும், ரூ.35க்கு விற்ற சேனை ரூ.40க்கும், ரூ.50க்கு விற்ற முருங்கை ரூ.60க்கும் மற்றும் ரூ.25க்கு விற்ற ஒரு பெரிய காலி பிளவர் ரூ.50க்கும் விற்கப்பட்டது. இதே போல் ஒரு சில காய்கறிகள் விலையில் எந்தவித மாற்றமும் இல்லாமல் அதே விலைக்கு கிலோ தக்காளி ரூ.16க்கும், பீட்ரூட் ரூ.30க்கும், இஞ்சி ரூ.120க்கும், கருணைக்கிழங்கு ரூ.60க்கும், தேங்காய் ஒன்று ரூ.8 முதல் ரூ.20 வரையிலும், ஒரு வாழைப்பூ ரூ.10 வரையிலும், ஒரு வாழைத்தண்டு ரூ.10வரையிலும் விற்கப்பட்டு வருகிறது. இது குறித்து சில்லரை வியாபாரிகள் கூறுகையில், திருச்சி மாவட்டத்தில் தொடர் மழையால் காந்தி மார்க்கெட்டுக்கு வரக்கூடிய இங்கிலீஸ் மற்றும் நாட்டுக் காய்கறிகள் வரத்து குறைந்துள்ளது. இத னால் காய்கறிகள் விலை தொடர்ந்து ஏறுமுகத்தில் இருந்து வருகிறது. தக்காளி, பீட்ரூட் உள்ளிட்ட காய்கறிகள் விலை குறைந்து விற்கப்பட்டு வருகிறது. மற்ற காய்கறிகள் விலை அடுத்தவாரம் கொஞ்சம் குறைய வாய்ப்பு உள்ளது என்றனர்.

**தனியார் பால் ரூ.4 உயர்வு**

திருச்சி, : தனியார் நிறுவனங்களின் பாலைவிட ஆவின் விலை அதிகமாக இருப்பதால், அதன் விற்பனை வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளது. அதே

சமயம் தனியார் நிறுவனங்களும் இன்று நள்ளிரவு முதல் லிட்டருக்கு ரூ.4 உயர்த்த உள்ளதாக தெரிகிறது. தனியார் பாக்கெட் பால் நிறுவனங்கள் ஏப்ரல், மே மாதங்களில் ஏற்படும் பால் தட்டுப்பாட்டை பயன்படுத்தி, கொள்முதல் விலையை உயர்த்தி விற்பனை விலையை அதிகரித்தனர். ஆனால் கூட்டுறவு சங்கங்களின் மூலம் கொள்முதல் செய்யும் ஆவின் நிறுவனம் கொள்முதல் விலையை உயர்த்தாமல் இருந்து வந்தது. இதையடுத்து கூட்டுறவு சங்கங்களில் உறுப்பினர்களாக உள்ள பால் உற்பத்தியாளர்கள் மாட்டு தீவனங்களின் விலை உயர்வை காரணம் காட்டி தனியார் நிறுவனங்களின் கொள்முதல் விலைக்கு நிகராக பாலுக்கான கொள்முதல் விலையை உயர்த்த வேண்டும் என்பதை வலியுறுத்தி பல்வேறு கட்ட போராட்டங்களை நடத்தினர். கடந்த ஜனவரி 1ம் தேதி பால் கொள்முதல் விலையை ரூ.3 அதிகரித்து தமிழக அரசு அறிவித்து விற்பனை விலை உயர்த்தப்படமாட்டாது என தெரிவித்தது. தனியார் நிறுவனத்தின் கொள்முதல் விலையை காட்டிலும் குறைவு என உற்பத்தியாளர்கள் குற்றம் சாட்டினர். அதன் பின்னர் தனியார் நிறுவனங்கள் 3 முறை கொள்முதல் விலையை உயர்த்தி விற்பனை விலை அதிகரித்தது. இந்நிலையில் கூட்டுறவு சங்கங்களில் மூலம் பாலை கொடுத்து வந்த உற்பத்தியாளர்கள் தனியார் நிறுவனங்களுக்கு செலுத்தினர். அரசு நிறுவனமான ஆவின் நிறுவனத்திற்கு பால் தட்டுப்பாடு ஏற்பட்டு முகவர்களுக்கு கோட்டா முறை அமல்படுத்தப்பட்டது. இதனால் தமிழகத்தில் ஆவின் பால் கிடைக்காமல் வாடிக்கையாளர்கள் அவதியடைந்தனர். இதையடுத்து கடந்த 1ம் தேதி முதல் ஆவின் நிறுவனம் லிட்டருக்கு கொள்முதல் விலையை பசும்பாலுக்கு ரூ.5ம், எருமை பாலுக்கு ரூ.4ம் உயர்த்தி அறிவித்தது. மேலும் விற்பனை விலையையும் லிட்டருக்கு ரூ.10 அதிகரிக்கப்பட்டது. தற்போது ஆவின் நிறுவனத்தின் பாக்கெட் பால் தனியார் பாக்கெட் நிறுவனத்தை விட ரூ.3 கூடுதலாக உள்ளதால் தனியார் நிறுவன பாலின் விலை அதிகரித்துள்ளது. இதனால் ஆவின்

நிறுவனத்தின் விற்பனை மந்தமாகவே உள்ளது. இதனால் தனியார் நிறுவனங்கள் விற்பனை விலையை இன்று நள்ளிரவு முதல் லிட்டருக்கு ரூ.4 உயர்த்த திட்டமிட்டுள்ளனர்.

**<u>அணைகள், கண்மாய்கள் நிரம்பின பழநியில் நெல் சாகுபடி பட்டய கௌப்ப வாய்ப்பு வேளாண் அதிகாரிகள் தகவல்</u>**

பழநி, :பழநி பகுதியில் கடந்த சில நாட்களாக பெய்த கனமழையால் அணை, கண்மாய்கள் நிரம்பி உள்ளன. இதை பயன்படுத்தி உரிய முறையில் விவசாயிகள் நெல் சாகுபடியில் ஈடுபட்டால் அதிக பலன்பெற வாய்ப்புள்ளது என வேளாண் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். பழநி மற்றும் அதன் சுற்றுப்புற கிராமங்களில் கடந்த வாரம் தொடர் கன மழை பெய்தது. இதனால் பழநி பகுதியின் விவசாயத்திற்கு ஆதரமாக உள்ள அணைகள் நிரம்பின. 65 அடி உயரம் உள்ள பாலாறு -பொருந்தலாறு அணை யின் நீர்மட்டம் 63.02 அடி யாக உள்ளது. 1524 மில்லியன் கனஅடி கொண் ட அணையின் கொள்ளளவு தற்போது 1415.11 மில்லியன் கனஅடியாக உள்ளது. விநாடிக்கு 336 கனஅடி நீர் வருகிறது. விநாடிக்கு 298 கனஅடி நீர் வெளியேற்றப்படுகிறது. அணைப்பகுதியில் நேற்று பெய்த மழையின் அளவு 1 மில்லிமீட்டராக பதிவாகி உள் ளது. 66.47 அடி உயரம் உள்ள வரதமாநதி அணை முழுவதும் நிரம்பி வழிகிறது. 110 மில்லியன் கனஅடி கொள்ளளவு கொண்ட அணையில் 111.40 மில்லியன் கனஅடி நீர் உள்ளது. விநாடிக்கு 60 கனஅடி நீர் வருகிறது. வரும் நீர் அப்படியே வெளியேற்றப்படுகிறது. 80 அடி உயரம் உள்ள குதிரையாறு அணை யின் நீர்மட்டம் 74.97 அடியாக உள்ளது. 253 மில்லியன் கனஅடி கொள் ளளவு கொண்ட அணை யில் தற்போது 222 மில்லி யன் கனஅடி நீர் உள்ளது. விநாடிக்கு 23 கனஅடி நீர் வருகிறது. வரும் நீர் அப்ப டியே வெளியேற்றப்படுகிறது. பழநி மற்றும் அதன் சுற்றுப்புற கிராமங்களில் கடந்த அக்டோபர் மாதம் பெய்த மழையின் அளவு 489 மில்லிமீட்டராகும். இதனாலும், அணையில் இருந்து நீர்

வெளியேற்றப்பட்டிருப்பதாலும், பழநி பகுதியில் உள்ள 63 கண்மாய்களும் நிரம்பி உள்ளன. எனவே, தற்போது நெல் அதிகப்படியான பரப்பில் சாகுபடி செய்வதற்கு சரியான சூழல் ஏற்பட்டுள்ளது. இந்த தண்ணீரை பயன்படுத்தி விவசாயிகள் பலன்பெறும் வகையில் பழநி வேளாண்மை உதவி இயக்குநர் சாந்தாமணி கூறியுள்ள ஆலோசனைகள் வருமாறு: நடப்பு சம்பா பருவத்திற்கு கோ-43, ஆடுதுறை- 45, கோ-50, ஆடுதுறை-39 ஆகியவை ஏற்ற மத்திய கால ரகங்கள் ஆகும். நெல் சாகுபடி செய்ய உள்ள விவசாயிகள் சான்று பெற்ற நெல் விதைகளை மட்டுமே பயன்படுத்த வேண்டும். நடவு முறைகளில் திருந்திய நெல் சாகுபடி முறையில் ஒரு குத்துக்கு 1 நாற்று எனவும், இளம் வயது நாற்று நடுதல், 25*25 சென்டிமீட்டர் இடையில் சதுர நடவு செய்திட வேண்டும். இதன்மூலம் களைகளை கோனோவீடர் களை கருவி மூலம் வயலிலேயே மடக்கி விடலாம். இதன்மூலம் அதிகப்படியான மகசூல் கிடைக்கும். ஆட்கள் பற்றாக்குறைகளை போக்கிட இயந்திர நடவை மேற்கொள்ளலாம். இவ்வாறு அவர் கூறினார்.

## <u>தேவாரம் பகுதியில் பலத்த மழை காட்டாற்று வெள்ளத்தின் கருணையில் நிரம்பிய குளங்கள்</u>

தேவாரம், : தேவாரம் பகுதியில் பெய்த பலத்த மழை யால் 10 குளங்கள் நிரம் பின. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். தேவாரம் இயற்கையிலேயே வறண்ட நிலப்பகுதிகளை அதிகமாக கொண்டுள் ளது. பருவமழை காலங்களில் பலத்த மழை பெய்தால் மட்டுமே காட் டாற்று ஓடைகளில் வெள் ளம் ஏற்பட்டு குளங்கள், கண்மாய்கள் நிரம்பும். போதிய மழையின்றி கடந்த 10 ஆண்டுகளாக கண்மாய்கள் நிரம்பவில்லை. தற்போது பருவ மழை பரவ லாக பெய்து வருவதால் தேவாரம் பெரிய தேவி, தே.ரெங்கநாதபுரம் சின்ன தேவி, தே.மேட்டுப்பட்டி ஊரணி, கோம்பை புதுக்குளம், கரியணம்பட்டி ஊரணி,

செட்டிகுளம், கரையான்பட்டி, பி.மல்லிங்கா புரம், க.புதுப்பட்டி குளங்களுக்கு 70 சதவீதத்திற்கும் அதிகமாக தண்ணீர் வந்துள்ளது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். தேவாரம் விவசாயிகள் நலனை கருத்தில் கொண்டு கடந்த 24ம் தேதி திறக்கப்பட்ட 18ம் கால்வாய் தண்ணீர் எதிர்பார்த்த அளவு வந்து சேரவில்லை. மெதுவாகவே வருகிறது. காரணம் ஜீரோபாயிண்டில் மணல் மேவிய இடங்களை தூர்வார மஞ்சளாறு வடிநில கோட்ட அதிகாரிகள் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. கூடலூர் வைர வன் ஆற்றில் இருந்து தேவாரம் வரை சுமார் 40 கிமீ தூரத்தில் கால்வாய் உள்ளது. இதில் 20 கிமீ வரை புதர்கள் மண்டி கிடக்கின்றன. இதனால் தண்ணீர் வருவ தில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. இந்த கால்வாய் மூலம் நிரம்பக்கூடிய கோனாம் பட்டி, திம்மிநாயக்கன்பட்டி, கிருஷ்ணம்பட்டி, தம்புரான்குளம், மேலசிந்தலைசேரி, தே.சிந்தலைசேரி, அழகர்நாயக்கன்பட்டி, லட்சுமிநாயக்கன்பட்டியில் உள்ள குளங்களுக்கு தண்ணீர் வரத்தே இல்லாத நிலை உள்ளது. காட்டாற்று ஓடைகள் மற்றும் 18ம் கால்வாயில் பாய்ந்தோடும் தண்ணீர் வரக்கூடிய கால்வாய்களை தூர்வாரி இருந்தால் 44 குளங்களும் நிரம்பியிருக்கும். போடி பகுதியில் உள்ள குளங்களுக்கும் தண்ணீர் வரத்து ஏற்பட்டிருக்கும். இனியாவது அதிகாரிகள் மழைக்காலங்களுக்கு முன்னதாக கால்வாய், குளங்களை தூர்வார நடவடிக்கை எடுக்க வேண்டும். நிலத்தடி நீர்மட்டம் உயரும் காட்டாற்று தண்ணீர் மூலம் நடப்பாண்டில் மானாவாரி பயிர்களான கம்பு, சோளம் உள்ளிட்டவைகளின் விவசாய பரப்பு அதிகரிக்கும். காய்கறி விவசாயமும் பெருகும். தண்ணீரே இல்லாமல் காய்ந்து கிடந்த தோட்டக்கிணறுகளில் நிலத்தடி நீர்மட்டம் உயரும். தண்ணீர் தட்டுப்பாடும் நீங்கும். 18ம் கால்வாய் தூர்வாரப்படும் பட்சத்தில் தண்ணீர் அதிகளவு குளங்கள், கண்மாய்களில் தேக்கி வைக்கப்படும். எனவே, அதிகாரிகள் பராமரிப்பு பணிகளை விரைந்து மேற்கொள்ள வேண்டுமென விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# தோட்டக்கலை பண்ணையில் மரக்கன்றுகள் விற்பனைக்கு தயார்

பெரியகுளம், :பெரியகுளம் அரசு தோட்டக்கலை பண்ணையில் பல்வேறு வகையான மரக்கன்றுகள் விற்பனைக்கு தயாராக உள்ளன. பெரியகுளம் அருகே அரசு தோட்டக்கலை பண்ணையின் மூலம் விவசாயிகளுக்கு தேவையான பழக்கன்றுகள், செடிகள் நேரடியாகவும், தோட்டக்கலைத்துறையில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் மூலமாகவும் விநியோகம் செய்யப்படுகிறது. தற்போது இந்த பண்ணையில் விற்பனைக்கு தயாராக உள்ள மரக்கன்றுகள், செடிகள், பழக்கன்றுகள் விபரம் மற் றும் அதன் விலையையும் தோட்டக்கலை அலுவலர் ஆறுமுகம் வெளியிட்டுள் ளார். அவர் வெளியிட்ட அறிக்கை: அல்போன்சா, பங்கனபள்ளி, இமாம்பசந்து, கல்லாமை, காசா ஆகிய ரக மா நெருக்கு ஒட்டு செடி ஒன்று ரூ.50, அல்போன்சா, பங்கனபள்ளி, இமாம்பசந்து, காசா, செந்து�ரம், ருமானி ஆகிய ரக மா மென்தண்டு ஒட்டு செடி ஒன்று ரூ.36, காஞ்சன், கிருஷ்ணா, ஜாக்கியா ரக பெருநெல்லி ஒட்டு ஒன்று ரூ.25, பெரியகுளம் 1, 2, 3, 4, ரக சப்போட்டா ஒட்டுச் செடி ஒன்று ரூ.30, விதை யில்லா கணேஷ் ரக மாதுளை பதியன் செடி ஒன்று ரூ.15, பெரியகுளம்-1 ரக எலுமிச்சை நாற்று ஒன்று ரூ.8, கோ-2 ரக பப்பாளி நாற்று ரூ.5, ரெட்லேடி, சிண்டா ரக வீரிய பப்பாளி நாற்று ஒன்று ரூ.18, பெரியகுளம்-1 ரக புளி ஒட்டு ரூ.15, சிங்கப்பூர், முட்டம் வரிகா ரக பலா ஒட்டு ஒன்று ரூ.30, விதையில்லாத நாவல் ஒட்டு ஒன்று ரூ.25க்கு விற் பனை செய்யப்படுகிறது. அதேபோன்று கடலூர் ரக சவுக்கு நாற்று ஒன்று ரூ.2, சிங்கப்பூர் ரக இலவம் நாற்று ஒன்று ரூ.5, பர்மா வகை தேக்கு நாற்று ரூ.8, பச்சை சம்பா ரக கறிவேப் பிலை நாற்று ஒன்று ரூ.10, ராம்நாட் குண்டு ரக மல்லிகை நாற்று ஒன்று ரூ.8, வேப்பங்கன்று, புங்கன் கன்று மற்றும் பல்வேறு வகையான அலங்கார செடிகள் தலா ஒன்று ரூ.5 வீதம் விற்கப்படுகிறது.விவசாயிகள்

தங்களுக்கு தேவை யான ரகங்களை பண்ணையில் பெற்றுக் கொள்ளலாம். இவ்வாறு அவர் கூறி உள்ளார்.

## 5 ஆண்டுகளுக்கு பிறகு சங்கராபுரம் குளம் நிறைந்தது விவசாயிகள் மகிழ்ச்சி

சின்னமனூர், :சின்னமனூர் அருகே சங்கராபுரம் குளம் 5 ஆண்டுகளுக்கு பிறகு நிறைந்ததால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். தேனி மாவட்டத்தில் தென்மேற்கு பருவமழை சரிவர பெய்யாமல் ஏமாற்றத்தை ஏற்படுத்தியது. இதனால் விவசாயம் கடுமையாக பாதிக்கப்பட்டு வறட்சி நீடித்தது. குளங்கள், கண்மாய்களில் நீர்வரத்தின்றி பொதுமக்கள் கடும் அவதியடைந்தனர். இந்நிலையில் தற்போது வடகிழக்கு பருவமழை பரவலாக பெய்து வருகிறது. இந்நிலையில் லட்சுமணநாயக்கன்பட்டி, வெம்பக்கோட்டை பகுதியிலிருந்து வந்த காட்டாறு வெள்ளத்தால் சின்னமனூர் அருகே சங்கராபுரம் குளம் நிரம்பி உள்ளது. 5 ஆண்டுகளுக்கு பிறகு குளம் நிரம்பி உள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். மேலும் பல கிராமங்களில் உள்ள சிறுகுளங்கள் நிரம்பி உள்ளன.

## ராஜபாளையத்தில் 30 மி.மீ மழை பதிவு

விருதுநகர், :விருதுநகர் மாவட்டத்தில் அதிகபட்சமாக ராஜபாளையத்தில் 30 மி.மீ மழை பதிவாகி உள்ளது. பெரியார் மற்றும் ஆனைக்குட்டம் அணைகள் நிரம்பி வருகின்றன. மாவட்டத்தில் நேற்று முன்தினம் இரவு முதல் நேற்று காலை 6 மணி வரை பெய்த மழையளவு (மீ.மீ) வருமாறு: அருப்புக்கோட்டை 4, சாத்து�ர் 1, சிவகாசி 0.8, விருதுநகர் 5.4, ராஜபாளையம் 30, காரியாபட்டி 19, பிளவக்கல் 11, வெம்பக்கோட்டை 9.2, கோவிலாங்குளம் 8.2 மி.மீ மழை பதிவாகி உள்ளது. மாவட்டத்தில் நேற்று காலை முதல் தொடர் சாரல் மழை பெய்தது. மாவட்டத்தில் உள்ள அணைகளில் நீர் மட்டம் வருமாறு:

43 அடி உயரம் கொண்ட பிளவக்கல் பெரியார் அணையில் 42 அடியும், 40 அடி உயரம் கொண்ட கோவிலாறு அணையில் 28 அடியும், 23 அடி உயரம் கொண்ட ஆணைக்குட்டம் அணையில் 20 அடியும், 7.5 அடி உயரம் கொண்ட குல்லூர்சந்தை அணையில் 2.5 அடியும், 17.5 அடி உயரம் கொண்ட கோல்வார்பட்டி அணையில் 4.6 அடியும், 23 அடி உயரம் கொண்ட வெம்பக்கோட்டை அணையில் 6 அடியும் நீர்மட்டம் உயர்ந்துள்ளது. இருக்கன்குடி அணைக்கு நீர்வரத்து இல்லை.

**<u>பேச்சிப்பாறை அணைக்கு வெள்ள அபாய எச்சரிக்கை பெருஞ்சாணி அணைக்கு இன்று அறிவிப்பு வெளியாகிறது</u>**

நாகர்கோவில், : மலையோர பகுதிகளில் கனமழை நீடிப்பதால் பேச்சிப்பாறை அணையில் இருந்து தண்ணீர் வெளி யேறும் ஆற்றின் கரையோர பகுதி மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப் பட்டுள்ளது. பெருஞ்சாணி அணைக்கு இன்று மீண்டும் வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட இருக்கிறது. குமரி மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக கனமழை பெய்து வருகிறது. மலையோர பகுதிகள், அணை யின் நீர்பிடிப்பு பகுதிகளிலும் மழை பெய்கிறது. தொடர் மழை காரணமாக அணை களுக்கு நீர்வரத்து அதிகரித் துள்ளது. காட்டாற்று வெள்ளம் அணைகளுக்கு பாய்ந்தோடி வருகிறது. இதனால் அணைகளின் நீர்மட்டம் மளமளவென்று அதிகரித் துள்ளது. ஏற்கனவே பேச்சிப் பாறை அணை மூடப் பட்டுள்ளது.இதனால் அணை வெகுவாக நிரம்பி வருகிறது. நேற்று காலை நிலவரப்படி பேச்சிப்பாறை அணைக்கு வினாடிக்கு 1060 கன அடி தண்ணீர் வந்து கொண்டி ருந்தது. அணை நீர்மட்டம் 41.95 அடியாக இருந்தது. சில மணி நேரங்களிலேயே அணை 42 அடியை எட்டிய தால் வெள்ள அபாய எச்ச ரிக்கை விடுக்கப் பட்டது. நேற்று மாலை நிலவரப்படி பேச்சிப்பாறை அணை நீர்மட்டம் 43.26 அடியாக இருந்தது. அணையில் 46 அடி வரை தண்ணீர் தேக்கி வைக்கப்பட வாய்ப்புகள் உள்ளன. அதற்கு மேலும் வருகின்ற தண்ணீர்

உபரியாக திறந்து விடப்படும் என்று பொதுப் பணித்துறை நீர்வள ஆதார அமைப்பு செயற் பொறியாளர் சுப்பிரமணி தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியதாவது: பேச்சிப்பாறை அணைக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப் பட்டுள்ள நிலையில் அணை பகுதிகள் 24 மணி நேரம் கண்காணிக்கப்பட்டு வருகிறது. பெருஞ்சாணி அணைக்கும் நாளை (இன்று) மீண்டும் வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்படும் வாய்ப்பு உள்ளது. பெருஞ்சாணி அணைக்கும் அதிக அளவு தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. பேச்சிப்பாறை அணையில் இருந்து உபரி தண்ணீர் திறக்கப்பட்டால் அது கோதையாறு, குழித்துறை தாமிரபரணி வழி பாய்ந்து தேங்காப்பட்டணம் கடலில் கலக்கும். இதனை போன்று பெருஞ்சாணி அணையில் இருந்து உபரி தண்ணீர் திறக்கப் பட்டால் அது பரளியாறு, வழியாக குழித்துறை தாமிர பரணியை சென்று சேரும். எனவே இந்த ஆறுகளின் கரையோர பகுதிகளில் வசிக்கும் மக்கள் எச்சரிக்கை யுடன் இருக்க வேண்டும். பெருஞ்சாணி அணையில் இருந்து உபரியாக திறந்து விடப்படும் தண்ணீர் பெருமளவு பாசனத்திற்காக பயன் படுத்தும் வகையில் பாசன கால்வாய்களுக்கு கொண்டு செல்லப்படும். தற்போது பெருஞ்சாணி மற்றும் சிற்றார் அணைகளில் இருந்து மட்டும் பாசனத்திற்கு தண்ணீர் திறக்கப் பட்டுள்ளது. இதனை யொட்டி ஆற்றின் கரையோர பகுதி மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை தொடர் பான அறிவிப்புகள் வெளியிடப் பட்டன. மக்கள் பாதுகாப்புடன் இருக்க வேண்டும் என்று அறிவு றுத்தப் பட்டுள்ளனர். இவ்வாறு அவர் தெரிவித்தார். நேற்று காலை நிலவரப்படி பெருஞ்சாணி அணைக்கு வினாடிக்கு 1588 கன அடி தண்ணீர் வந்து கொண்டி ருந்தது. இதனால் அணை நீர்மட்டம் 69.50 அடியாக உயர்ந்துள்ளது. அணையில் இருந்து 650 கன அடி தண்ணீர் திறந்து விடப் பட்டுள்ளது. சிற்றார்-1ல் 16.50 அடியும், சிற்றார்-2ல் 16.60 அடியும், பொய்கையில் 8.80 அடியும், மாம்பழத் துறையாறு அணையில் 54.12 அடியும் நீர்மட்டம் காணப்படுகிறது. ஆற்றின் கரையோரத்தில்

வசிக்கும் மக்கள் உஷாராக இருக்க வேண்டும். சிற்றார்-1ல் 16.50 அடியும், சிற்றார்-2ல் 16.60 அடியும், பொய்கையில் 8.80 அடியும், மாம்பழத் துறையாறு அணையில் 54.12 அடியும் நீர்மட்டம் காணப்படுகிறது. சிற்றார்-1 அணைக்கு வினாடிக்கு 209 கன அடி தண்ணீர் வந்து கொண் டிருந்த நிலையில் அணையில் இருந்து 200 கன அடி தண்ணீர் திறக்கப் பட் டுள்ளது. மாம்பழத்துறை யாறு அணையில் இருந்து வினாடிக்கு 43 கன அடி தண்ணீர் உபரியாக திறந்து விடப்பட்டுள்ளது. மாவட் டத்தில் அதிக பட்சமாக புத்தன் அணையில் 78 மி.மீ மழை பதிவாகி இருந்தது. மாவட்டத்தில் நேற்றும் காலை முதல் மேகமூட் டத்துடன் காணப்பட்டது. ஒரு சில இடங்களில் சாரல் மழை பெய்தது.

பேச்சிப்பாறை : 42

பெருஞ்சாணி : 77.8

சிற்றார்-1 : 20.2

சிற்றார்-2 : 8.4

பொய்கை : 33.4

மாம்பழத்துறையாறு : 11

நாகர்கோவில் : 8.2

பூதப்பாண்டி : 15.5

சுருளோடு : 66

கன்னிமார் : 28.4

ஆரல்வாய்மொழி : 31.4

பாலமோர் : 47.2

மயிலாடி : 12.8

கொட்டாரம் : 14.2

இரணியல் : 4.2

ஆனைக்கிடங்கு : 9

குளச்சல் : 6

குருந்தன்கோடு : 6.4

அடையாமடை : 13

கோழிப்போர்விளை : 10

திருவட்டார் : 27

மழையளவு (மி.மீ)

## ஷட்டர்கள் சீரமைப்பு விவசாயிகள் மகிழ்ச்சி

காட்டுமன்னார்கோவில், : காட்டுமன்னார்கோவில் அருகே மோவூர். இங்கு செல்லும் பாசன வாய்க்காலில் ஷட்டர்கள் சேதம் அடைந்தது. இதன் காரணமாக தண்ணீர் தேக்க முடியாமல் விவசாயிகள் சிரமப்பட்டனர். இதனால் இந்த பகுதியில் பயிரிடப்பட்ட நெற்பயிர்கள் கருகின. ஷட்டரை சீரமைக்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர். இது தொடர்பான செய்தி தினகரன் நாளிதழில் வெளியானது. இதன் எதிரொலியாக பொதுப்பணித் துறையினர் ஷட்டரை சீரமைக்கும் பணியில் ஈடுபட்டு புது ஷட்டர்களை பொருத்தினர். இதனால் தண்ணீர் தேக்கப்பட்டு விளை நிலங்களுக்கு விவசாயிகள் பயன்படுத்தினர். ஷட்டர் சீரமைக்கப்பட்டதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர். உடனடியாக சீரமைப்பு பணி மேற்கொண்ட அதிகாரிகளுக்கு விவசாயிகள் பாராட்டு தெரிவித்தனர்.

## சம்பா நெல் சாகுபடியை காப்பீடு செய்து கொள்ள வேண்டும்

கடலூர், : வடகிழக்கு பருவமழையிலிருந்து சம்பா நெற்பயிர்களை பாதுகாத்து கொள்ள தேசிய பயிர் காப்பீடு திட்டத்தில் சேருமாறு கடலூர் மாவட்ட விவசாயிகளுக்கு ஆட்சியர் சரேஷ்குமார் வேண்டுகோள் விடுத்துள்ளார். கடலூர் மாவட்டத்தில் வட கிழக்கு பருவமழை தொடங்கி தற்போது பரவலாக மழை பெய்து வருகிறது. இதனால் மாவட்டத்தில்

தற்போது விவசாயிகள் சாகுபடி செய்துள்ள சம்பா பருவம் நெற்பயிர் களை இயற்கை சீற்றம் தொடர் மழை மற்றும் பூச்சி நோய் தாக்குதல் களால் ஏற்படும் பாதிப்பிலிருந்து பாதுகாத்துக்கொள்ள தேசிய வேளாண் பயிர் காப்பீடு திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. எனவே, கடலூர் மாவடட விவசாயிகள் அனைவரும் தங்கள் சம்பா நெல் சாகுபடி பயிரை தேசிய வேளாண் பயிர் காப்பீடு திட்டத்தின் கீழ் அருகாமையில் உள்ள தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் அல்லது வர்த்தக வங்கிகள் மூலம் காப்பீடு செய்து பயன்பெற கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள். தற்போது தேசிய வேளாண் பயிர் காப்பீட்டு நிறுவனத்தின் வழிகாட்டுதலின்படி கடன் பெறாத பெரு விவசாயிகள் ஒரு ஏக்கருக்கு ரூ.128 பிரிமீயம்(1 சதவீதம்) செலுத்தியும், சிறு குறு விவசாயிகள் ரூ.115 பிரீமியம்(0.90 சதவீதம்) செலுத்தியும் பயிர் காப்பீடு செய்து கொள்ளலாம். கடன் பெறாத விவசாயிகள் பிரிமியம் செலுத்த வேண்டிய கடைசி நாள் வரும் 15ம் தேதி. இதே போல் கடன் பெற்ற விவசாயிகள் ஒரு ஏக்கருக்கு ரூ. 195 பிரிமியம் (1 சதவீதம்) செலுத்தி பயிர் காப்பீடு செய்து கொள்ளலாம். கடன் பெற்ற விவசாயிகள் பிரீமியம் செலுத்த வேண்டிய கடைசி நாள் வரும் 30ம் தேதி. மேலும் இத்திட்டத்தில் விவசாயிகள் கூடுதல் பிரீமியம் செலுத்தி கூடுதல் காப்பீட்டுத் தொகை பெற வழிவகை உள்ளது. மேலும் விவரங்களுக்கு கடலூர் மாவட்ட வேளாண் பயிர் காப்பீட்டுத்திட்ட ஒருங்கிணைப்பாளர் ராமச்சந்திரனை தொடர்பு கொண்டு தேவையான விவரங்களை பெற்றுக்கொள்ளலாம். அல்லது தங்கள் பகுதி வேளாண்துறை மற்றும் கூட்டுறவுத் துறை அலுவலர்களை தொடர்பு கொள்ளலாம், என ஆட்சியர் தெரிவித்துள்ளார்.

## புஞ்சைபுளியம்பட்டி பகுதியில் நிலக்கடலை அறுவடை தீவிரம்

சத்தியமங்கலம்.: புன்செய்புளியம்பட்டி சுற்றுவட்டார பகுதிகளில் பரவலாக மழை பெய்துள்ளதால் மானாவாரி பயிராக பயிரிடப்பட்டுள்ள நிலக்கடலை அறுவடை பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது. ஈரோடு மாவட்டம் புஞ்சைபுளியம்பட்டி சுற்றுவட்டார பகுதிகளான காராப்பாடி, காவிலிபாளையம், நொச்சிக்குட்டை, மாதம்பாளையம், நல்லூர்,

புங்கம்பள்ளி, பனையம்பள்ளி, தேசிபாளையம் உள்ளிட்ட கிராமங்களில் சுமார் 25 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் விவசாயிகள்ஆடிப்பட்டத்தில் நிலக்கடலை விதைப்பு செய்துள்ளனர். மானாவாரி பயிரான நிலக்கடலை மூன்று மாத கால பயிராகும். மண்ணில் உள்ள ஈரப்பதத்தின் மூலம் செடிகள் நன்கு முளைத்து வந்தபோது தொடர்ச்சியாக மழை பெய்ததால் களை வெட்டி அடியுரமிடப்பட்டது. பின்னர் நிலக்கடலை செடிகள் பூக்கள் பூத்து வேரில் காய்கள் காய்த்தன. கடந்த ஒரு மாதகாலமாக மழை பெய்து தற்போது மழை நின்றவுடன் மண்ணின் ஈரத்தை பயன்படுத்தி கடலை அறுவடை பணி நடைபெற்று வருகிறது. ஒரு ஏக்கருக்கு 7 குவிண்டால் வரை விளைச்சல் கிடைப்பதாக விவசாயிகள் கூறுகின்றனர். கடந்த வார நிலவரப்படி புஞ்சை புளியம்பட்டி ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் நிலக்கடலை பச்சை 1 குவிண் டால் ரூ.1950 முதல் ரூ.2500 வரையிலும், காய்ந்தது 1 குவிண்டால் ரூ.3500 முதல் ரூ.4050 வரை விற்பனையாகியுள்ளது. கடந்த 5 ஆண்டுகளாக சரிவர மழை பெய்யாததால் மானாவாரி நிலக்கடலை பயிர்கள் பாதி க்கப்பட்டு எதிர்பார்த்த லாபம் கிடைக்கவில்லை எனவும், இந்த ஆண்டு நல்ல மழை பெய்து பயிர் அறுவடை செய்யப்படுவதால் ஓரளவு லாபம் கிடைக்கும் எனவும் இப்பகுதி விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

## <u>பண்ணைக்குட்டைகள் அமைக்க விண்ணப்பம் வரவேற்பு</u>

சிவகங்கை, :சிவகங்கை மாவட்ட்ததில் பண்ணைக்குட்டைகள் அமைக்க விண்ணப்பம் வரவேற்கப்படுகிறது. இதுகுறித்து மாவட்ட நிர்வாகம் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: சிவகங்கை மாவட்டத்தில் மகாத்மா தேசிய ஊரக வேலை உறுதித்திட்டத்தின்கீழ் நில மேம்பாடு செயல்பாடுகள் தொடர் பான பணிகளில் எஸ்சி, எஸ்டி மற்றும் சிறு, குறு விவசாயிகளின் நிலங்களில் பண்ணைக்குட்டைகள் அமைக்கப் பட்டுள்ளது. 2013-14ம் ஆண்டில் ரூ.71 லட்சம் செலவினத்தில் 113 பண்ணைக்குட்டைகள் அமைக்கப்பட்டன. அரசு புறம்போக்கு நிலங்களில் ரூ.51 லட்சம் செலவினத்தில் 73 பண்ணைக்குட்டைகள்

அமைக்கப்பட்டுள்ளது. 2014-15ம் ஆண்டில் மாவட் டம் முழுவதும் 887பண்ணைக்குட்டைகள் ரூ.40 ஆயிரம் முதல் ரூ.1 லட்சத்து 50 ஆயிரம் வரையிலான மதிப்பீட்டில் அமைக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. பண்ணைக்குட்டைகள் மூலம் விவசாயிகளின் நிலங்களில் நிலத் தடிநீர் மட்டம் உயரவும், வறட்சியான காலங்களில் கால்நடைகளின் குடிநீர் தேவை யை பூர்த்தி செய்யவும், விவசாயத்திற்கு பயன்படும் வகையிலும் இந்த பண்ணைக்குட்டைகள் அமைக்கப்பட்டு வருகிறது. எனவே எஸ், எஸ்டி, சிறு மற்றும் குறு விவசாயிகள் பண்ணைக்குட்டைகள் அமைப்பதற்கான விண்ணப்பங்களை அளிக்கலாம். இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

## <u>நெற்பயிருக்கு உரமிட புதிய கருவி வேளாண்மை அதிகாரி தகவல்</u>

நெல்லை,:நெல்லை வேளாண்மை துறை இணை இயக்குனர் சந்திரசேகர் விடுத்துள்ள செய்திக்குறிப்பு: நெற்பயிருக்கு தழைச்சத்து உரமிடும்போது வயதுக்கு ஏற்ப 3 அல்லது 4 பங்குகளாக பிரித்து இடவேண்டும். உரத்தை எப்போது எந்த அளவு இடவேண்டும் என்பதை இலை வண்ண அட்டை என்ற புதியகருவியை பயன்படுத்தி அறிந்துகொள்ளலாம். 4 வண்ணங்களில் உள்ள இந்த அட்டையை பயிரின் இலைகள் வண்ணத்துடன் ஒப்பிட்டு பார்த்து கணக்கிட வேண்டும். இதனால் அதிக மகசூல் பெறமுடியும். வண்ண அட்டையை பயன்படுத்தி உரமிடுவதால் தழைச்சத்து உரத்தின் தேவை அறிந்து இடமுடிகிறது. இதனால் உரத்தின் பயன்பாடு குறைந்து உரச்செலவு குறைகிறது. இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**முல்லைப்பெரியாறு அணையின் நீர்மட்டத்தை 136 அடியாக குறைப்பது தொடர்பாக சுப்ரீம் கோர்ட்டில் நாளை மனுதாக்கல் கேரள அரசு முடிவு**



திருவனந்தபுரம், முல்லைப்பெரியாறு அணையின் நீர் மட்டத்தை 136 அடியாக குறைப்பது தொடர்பாக சுப்ரீம் கோர்ட்டில் நாளை வழக்கு தொடர கேரள அரசு முடிவு செய்துள்ளது.

தொடரும் சர்ச்சை

முல்லைப்பெரியாறு அணை மூலம் தமிழகத்தின் 5 மாவட்டங்கள் பாசன வசதி பெற்று வருகின்றன. இந்த அணையின் நீர்மட்டத்தை 142 அடியாக உயர்த்த வேண்டும் என தமிழகம் நீண்ட நாட்களாக கோரிக்கை விடுத்து வந்தது. ஆனால் இதற்கு மறுப்பு தெரிவித்து வரும் கேரள அரசு, அணையின் பாதுகாப்பை கருதி நீர்மட்டத்தை 136 அடியாகவே தொடர வேண்டும் என வலியுறுத்தி வருகிறது. இதனால் முல்லைப்பெரியாறு விவகாரத்தில் நீண்ட நாட்களாக சர்ச்சை நீடித்து வந்தது.

சுப்ரீம் கோர்ட்டு அனுமதி

இது தொடர்பான வழக்கில் கடந்த மே மாதம் தீர்ப்பளித்த சுப்ரீம் கோர்ட்டு, முல்லைப்பெரியாறு அணையின் நீர் மட்டத்தை 142 அடியாக உயர்த்த அனுமதியளித்தது. அதன்படி அணையின் நீர்மட்டத்தை 142 அடியாக உயர்த்த, கண்காணிப்புக்குழுவினர் நடவடிக்கை எடுத்து வருகின்றனர். இந்த நிலையில் அணையின் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் சமீபத்தில் பெய்த கனமழையால் அணையின் நீர்மட்டம் வேகமாக

உயர்ந்து வருகிறது. அணையின் நீர்மட்டம் நேற்று 138.1 அடியாக இருந்தது.

உம்மன்சாண்டி தகவல்

அணை வேகமாக நிரம்பி வரும் நிலையில் கேரள அரசு மீண்டும் இப்பிரச்சினையை கையில் எடுத்துள்ளது. இது தொடர்பாக முதல்–மந்திரி உம்மன்சாண்டி நேற்று செய்தியாளர்களிடம் கூறியதாவது:–

முல்லைப்பெரியாறு அணையின் நீர்மட்டம் வேகமாக உயர்வது குறித்து மாநில அரசுக்கு தகவல் வந்துள்ளது. எனவே மாநில அரசின் தலைமை செயலாளர் மற்றும் உயர் அதிகாரிகள் அணையை பார்வையிட்டுள்ளனர்.

பரிசீலனை

நீர்மட்டம் அதிகரித்து வருவதால் அணையின் பாதுகாப்பு குறித்து அருகில் வாழும் மக்களிடையே மிகுந்த அச்சம் நிலவி வருகிறது. இதனால் அணையின் நீர்மட்டத்தை தொடர்ந்து 136 அடியாகவே வைத்திருக்க வேண்டும் என கோரிக்கை விடுத்து வருகிறோம்.

ஆனால் கேரள அரசின் இந்த கோரிக்கையை, சுப்ரீம் கோர்ட்டால் அமைக்கப்பட்டுள்ள உயர்மட்டக்குழு நிராகரித்து விட்டது. எனினும் நீர் மட்டத்தை தொடர்ந்து 136 அடியாக பராமரிப்பதற்கு தேவையான சட்டப்பூர்வ நடவடிக்கைகளை நாங்கள் பரிசீலித்து வருகிறோம்.

இவ்வாறு உம்மன்சாண்டி கூறினார்.

மந்திரி தலைமையில் கூட்டம்

இதற்கிடையே மாநில நீர்ப்பாசனத்துறை மந்திரி ஜோசப் தலைமையில் நேற்று உயர்மட்டக்குழு கூட்டம் நடந்தது. இந்த கூட்டத்தில், அணையின் நீர்மட்டத்தை 138.1 அடியாக குறைப்பது தொடர்பாக சுப்ரீம் கோர்ட்டில் வழக்கு தொடர முடிவு செய்யப்பட்டது.

இது குறித்து மந்திரி ஜோசப் கூறும்போது, ‘முல்லைப்பெரியாறு அணையின் நீர்மட்டம் 138 அடியை கடந்துள்ள நிலையில், செயல்படாத 2 மதகுகளை விரைவில் சரி செய்யக்கோரியும், அதுவரை நீர்மட்டத்தை

136 அடியாக குறைக்க உத்தரவிடக்கோரியும் சுப்ரீம் கோர்ட்டில் நாளை (வெள்ளிக்கிழமை) வழக்கு தொடரப்படும்' என்றார்.

முல்லைப்பெரியாறு அணை விவகாரத்தில் கேரள அரசு சுப்ரீம் கோட்டை அணுக முடிவு செய்துள்ளதால், இந்த விவகாரம் மீண்டும் விஸ்வரூபமெடுத்துள்ளது.

## பாரம்பரிய உணவு திருவிழா



அரியலூர் மாவட்டம் ஆண்டிமடம் ஊராட்சி ஒன்றிய ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப்பணிகள் திட்டத்தின் பாரம்பரிய உணவுத் திருவிழா ஆண்டிமடம் கடைவீதியில் உள்ள திருமண மண்டபத்தில் நடந்தது. விழாவிற்கு ஆண்டிமடம் ஒன்றியக்குழுத்தலைவர் சுகுணா தவச்செல்வன் தலைமை தாங்கினார். அரியலூர் குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலர் அன்பரசி முன்னிலை வகித்தார். ஆண்டிமடம் குழந்தை வளர்ச்சித்திட்ட அலுவலர் அருணா வரவேற்றார். விழாவில் கேழ்வரகு, கம்பு, தினை, சோளம், குதிரைவாலி, , சாமை ஆகிய இயற்கை சிறுதானியங்களில் இருந்து களி, ரொட்டி, இட்லி, தோசை, அடை, பொங்கல், பாயசம், பணியாரம், கிச்சடி, கஞ்சி உள்பட 33 விதமான உணவுப்பொருட்களை ஆண்டிமடம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட 125 ஊட்டச்சத்து மைய பொறுப்பாளர்கள் தயார் செய்து பொதுமக்களின் பார்வைக்கு வைத்திருந்தனர். சிறுதானியத்தைகொண்டு தயார் செய்த உணவுப்பொருட்கள் அனைவருக்கும் வழங்கப்பட்டது. மேலும் இயற்கை உணவுகள் சம்பந்தமாக கும்மிப்பாட்டு கலைநிகழ்ச்சிகள் மூலம் விளக்கினர். விழாவில் ஆண்டிமடம் மூலிகை மருத்துவர் சுவாமி சுந்தர்ஜி, அரியலூர் புள்ளியியல் ஆய்வாளர் சுப்பிரமணியர், பெரியாத்துக்குறிச்சி கூட்டுறவு சங்கத்தலைவர் தவச்செல்வன் மற்றும் ஊட்டச்சத்து மைய

பொறுப்பாளர்கள் கிரிஜா, சுந்தரி, தமிழரசி, ராணி, உள்பட பலர் கலந்து கொண்டனர். முடிவில் ஆண்டிமடம் குழந்தை வளர்ச்சித்திட்ட மேற்பார்வையாளர் பூபதி நன்றி கூறினார்.

**திருவாடானை தாலுகாவில் நடவு மூலம் நெல் சாகுபடி பணிகள் தீவிரம்**



திருவாடானை தாலுகா வில் நடவு மூலம் நெல் சாகுபடி பணிகள் முழு வீச்சில் நடைபெற்று வருகிறது. நெல் சாகுபடி திருவாடானை தாலுகாவில் இதுவரை சுமார் 48,000 எக் டேர் நிலப்பரப்பில் நெல் சாகு படி செய்யப்பட்டுள்ளது. கடந்த சில நாட்களாக பெய்து வரும் தொடர்மழை காரண மாக இப்பகுதியில் விவசாய பணிகள் முழுவீச்சில் நடை பெற்று வருகிறது. ஒவ்வொரு ஆண்டும் இந்த தாலுகாவில் சுமார் 5000 எக்டேர் நிலப்பரப் பில் நெல் நடவுப்பணி நடை பெறுவது வழக்கம். ஆனால் கடந்த சில வருடங்களாக மழை இல்லாத காரணத்தால் நடவு நெல் விவசாயம் கொஞ்சம் கொஞ்சமாக குறைந்து கொண்டே வருகிறது. இந்த ஆண்டு சுமார் 1000 எக்டேர் நிலப்பரப்பில் நடவு மூலமாக விவசாய பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகி றது. திருவாடானை யூனிய னில் தொண்டி, கொடிபங்கு, நம்புதாளை, தேளூர், சின்னத் தொண்டி, மல்லனூர், சேம வயல், தளிர்மருங்கூர், பெருமா னேந்தல், காடாங்குடி, பழைய னக்கோட்டை, புதுக்குடி, முகில்தகம் உள்ளிட்ட பகுதிகளில் சுமார் 500 எக்டே ருக்கு மேற்பட்ட நிலத்திலும், ஆர்.எஸ்.மங்கலம் யூனியனில் சோழந்தூர், திருப்பாலைக் குடி, பழங்கோட்டை, கொத்தி யார்கோட்டை, வளமாவூர், கருங்குடி உள்ளிட்ட பகுதிகளி லும் நடவு பணி மூலம் நெல் சாகுபடி பணிகள் துரிதமாக நடைபெற்று வருகிறது.

தி இந்து
தமிழால் இணைவோம்

இன்றைய வேளாண் செய்திகள்

## நிரந்தர வருமானம் தரும் கோரை



கரூர் மாவட்டத்தின் சில பகுதிகள் செழிப்பான நன்செய் பூமியாகவும், ஏனைய பகுதிகள் வானம் பார்த்த புன்செய் நிலமாகவும் உள்ளது. நன்செய் பகுதியில் அதிகமாக நெல், வாழை ஆகியவை பயிரிடப்படும் நிலையில் காவிரியை யொட்டியுள்ள புதுப்பாளையம், மறவாபாளையம், நொய்யல், நெரூர், குளித்தலை, நங்கவரம் என காவிரி பாசன பகுதிகளில் அதிகளவில் கோரை சாகுபடி நடைபெற்று வருகிறது. நெல், வாழை, கரும்பு, வெற்றிலை போன்ற நன்செய் பயிர்களை விட்டு எதற்கு கோரை சாகுபடியில் விவசாயிகள் ஈடுபடுகின்றனர் என்ற கேள்வி எல்லோர் மனதிலும் எழுகிறது. இந்தக் கேள்விக்கு விடை தேடி கரூர் மாவட்டம் குளித்தலை வட்டம் மேட்டுமருதூர் உழவர் ஆய்வுமன்ற அமைப்பாளரான மா.வீரமலை (64) என்ற விவசாயியை சந்தித்தோம். முன்னாள் கிராம முன்சீப்பான அவர். கோரை சாகுபடி செய்வது ஏன் என்பது பற்றி விவரித்தார். “கோரைக்கு எப்போதும் தண்ணீர் நிற்க வேண்டும். மேலும், தண்ணீர் பாய்ச்சலையும், காய்ச்சலையும் தாங்கக்கூடியது கோரை. எவ்வளவு தண்ணீர் நின்றாலும் தாங்குவதுடன், தண்ணீ ரின்றி வறண்டு போனாலும் தாங்கக் கூடியது கோரை. ஆடு, மாடுகள் மேயாது. திருடு போகாது, எந்த பருவத்திலும் சாகுபடி மேற் கொள்ளலாம். ஒருமுறை கோரை சாகுபடி செய்துவிட்டால் 10, 15 ஆண்டுகள் வரை அதனை வைத்து வருவாய் ஈட்டலாம். வியாபாரிகள் நம் வீடு தேடி வந்து

கொள்முதல் செய்து கொள்வார்கள். நிலத்தை உழவு செய்து, வரப்பு வெட்டி நெல்லுக்கு தயார் செய்வது போல வயலைப் பண்படுத்திக் கொடுத்து விட்டால், வியாபாரிகளே கோரைக்கிழங்கு நட்டுக் கொடுத்து விடுவார்கள். முதல் முறை சாகுபடியின் போதும் மட்டும் நடவுக்கென கணிசமான தொகையை செலவிடு வதுடன், உரம் வைத்தல், களையெடுப்பு ஆகியவற்றை மேற் கொள்ள வேண்டும். அறுவடைக்காக 10 மாதங்கள் வரை காத்திருக்கவேண்டும். ஒரு கட்டு கோரை ரூ.900 முதல் ரூ.1,200 வரை விலை போகிறது. ஒரு கட்டில் 25 முதல் 30 கிலோ வரை கோரை இருக்கும். ஒரு ஏக்கரில் ரூ.40 ஆயிரம் முதல் ரூ.45 ஆயிரம் வரை வருமானம் பார்க்கலாம். அதன்பின் களை எடுப்பது, உரம் வைப்பது ஆகிய பணிகளை மட்டும் மேற்கொண்டால் 6 மாதங்களுக்கு ஒரு முறை வியாபாரிகள் வந்து அறுவடை செய்து கொள்வார்கள். புகழ்பெற்ற பத்தமடை பாய் தயாரிக்க கரூர் மாவட்டத்திலிருந்து கோரைகள் கொள்முதல் செய்யப் படுகின்றன. கோரை ஏற்றுமதியும் செய்யப்படுகிறது" என்கிறார் அவர். **விவரங்களுக்கு 96987 69572**

## <u>தகவல் பலகை: வேம்பின் மகத்துவம்</u>



வேம்பின் அனைத்து பாகங்களும் விவசாயி களுக்குப் பயன்படுகின்றது. வேப்பிலையில் தழைச்சத்து 2.5%, மணிச்சத்து 0.6% , சாம்பல் சத்து 2.0% உள்ளன. இதனை நன்செய் நிலங்களுக்கு இடலாம். வேப்பந் தழை இட்ட நிலத்தில் கரையான் பாதிப்பு இருக்காது. நூற்புழுவின் தாக்குதல் குறைந்துவிடும். உலர்ந்த வேப்பிலைகளை நெல், சோளம் போன்ற தானியங் களுடன் கலந்து வைத்தால் வண்டுகள், அந்துப்பூச்சிகள் மற்றும் துளைப்பான்களின் தாக்குதலிலிருந்து தடுக்கலாம்.

**வேப்பங்கொட்டைக் கரைசல்**

10 கிலோ வேப்பங் கொட்டையை நன்கு தூளாக்கி அதை 20 லிட்டர் நீரில் கரைத்து ஒரு நாள் வைத்திருந்து வடிகட்டி 200 லிட்டர் நீர் சேர்த்து ஒட்டும் திரவம் 200 மில்லி அல்லது 100 கிராம் காதிபார் சோப்பு சேர்த்து கைத்தெளிப்பான் கொண்டு தெளிக்க வேண்டும். இவ்வாறு தெளிப்பதன் மூலம் பயிர்களில் தோன்றும் கம்பளிப் புழுக்கள், அசுவி னிகள், தத்துப்பூச்சிகள், புகை யான், இலைச்சுருட்டுப்புழு, ஆணைக் கொம்பன், கதிர்நா வாய்ப் பூச்சி ஆகியவற்றைக் கட்டுப்படுத்தலாம். பயிர் களைத் தாக்கும் சாம்பல் நோய், மஞ்சள் வைரஸ் நோய் முதலியவைகளைக் கட்டுப்படுத்த வேப்பெண் ணெய்க் கரைசல் பயன்படும்.

**வேப்பம் புண்ணாக்கு**

வேப்பம் புண்ணாக்கில் தழைச்சத்து 5.2%, மணிச் சத்து 1.1%, சாம்பல் சத்து 1.5%உள்ளன. இதை நேரடியாக பயிருக்கு இடலாம்.